பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை (14-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 302

## தமது திருத்த யோசனைகள் ஏற்கப்படாவிடில் மாற்றுத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க ஈ.பி.டி.பி. முடிவு!

## தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்துக்கு வரும்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு முன்வைத்துள்ள யோசனைகளுக்கு ஈ.பி.டி.பி கட்சி தெரிவித்திருக்கும் திருத்தங்களை அரசு கவனத்தில் எடுக்காவிட்டால் -

மாற்றுத் தீர்வுத்திட்டம் ஒன்றைத் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என அக்கட்சி தீர்மானித்திருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகின்றது.

மாற்றுத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதில் ஈ. பி. டி. பி. தலைமைப்பீடம் முனைப்பாக ஈடுபட்டிருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

"அரசு சமர்ப்பித்த தீர்வு யோசனைகளை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அத்தீர்வு யோசனைகள் தொடர்பாக சில திருத்தங்களை நாம் முன்வைத்திருக்கின்றோம். தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு — அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு — அத்திருத்தங்களை அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

"எமது கோரிக்கைகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஜெய சிகுறு' 5 மாதங்கள் பூர்த்தி

மட்டக்களப்பு, ஒக். 14

வவுனியாவில் இருந்து வடக்கே ஆனையிறவு ஊடாக குடா நாட்டுக்குத் தரைவழிப் பாதை ஒன்றைத் திறக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை நேற்றுடன் 5 மாதங்களை — 184 நாள்களைத் — தாண்டியுள்ளது.

இன்று ஆறாவது மாதத்தில் பிரவேசிக்கும் இந்த நட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கண்கள் கட்டப்பட்ட நிலையில் வீதியோரத்தில் கிடந்த யுவதி!

### நாயன்மார்கட்டில் சம்பவம்

இரவு கிணற்றடிக்குத் தண்ணீர் எடுக்கச் சென்ற இளம் பெண் திடீரென காணாமற் போனார். அடுத்த நாள் காலை வீதியோரத்தில் கண்கள், வாய் என்பன துணியால் கட்டப்பட்ட நிலையில் அவர் காணப்பட்டார்.

கடந்தசனிக்கிழமை நாயன்மார்கட்டில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அப்பகுதியில் உள்ள வித்தியாலயம் ஒன்றில் ஜி. சீ. ஈ. (சாதாரண தர) வகுப்புப் படிக்கும் மாணவி ஒருவரே இவ்வாறு காணாமல் போய் மீட்கப்பட்டார்.

கட்டவிழ்த்த போது ஏக்கப் பிரேமையுடன், களைப் படைந்தநிலையிலும் காணப்பட்ட அவரை விசாரித்த போது —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலால் நேற்று வவுனியா ஸ்தம்பிதம்

வவுனியா, ஒக். 14

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து புளொட் அமைப்பினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலால் வவுனியா நகரம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

சகல வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரசாங்க செயலகங்கள் மூடப்பட்டுக் கிடந்தன.

மக்கள் நடமாட்டம் இன்றி நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

வாகனங்கள் வீதிகளில் காணப்படவில்லை; இராணுவ, பொலீஸ் வாகனங்கள் மட்டும் ஓடித்திரிந்தன.

ஹர்த்தால் முழுமையான வெற்றியைத் தந்ததாகப் 'புளொட்' வட்டாரங்கள் தெரிவித்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஒக். 14

சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையைக் கண்டித்து வவுனியா நகரில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி வவுனியா செயலகத்தை அடைந்து அங்கு வவுனியா அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும்.

அதைத் தொடர்ந்து அங்கு மாபெரும் கூட்டமும் நடைபெறும். (ஐ-3)

## மட்டு. ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பொலீஸார் அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு, ஒக். 14

சிங்கள ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் ஏற்பாட்டில் இன்று நடைபெறுவதாக இருந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பொலீஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு காந்தி சிலை மைதானத்தில் இன்று காலை 9 மணி முதல் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் தேசிய அமைப்பாளர் ஆர். துரைரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள உண்ணாவிரதத்தை மட்டு மாநகரசபைத் தலைவர் செழியன் பேரின்பநாயகம் இன்று மாலை முடித்து வைப்பார். (ஐ-21)

## பொருள்களை ஏற்றி வரும் பணியில் இரு கப்பல்கள் ஈடுபடுத்தப்படும்

### கொழும்பில் நேற்று வர்த்தகர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

வடபகுதிக்கான பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்துவர இரண்டு கப்பல்களை சேவையில் ஈடுபடுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"மாஹோ" கப்பலில் யாழ். அரச அதிபருக்கான பொருள்களையும், "கண்டி" என்ற கப்பலில் தனியார் வர்த்தகர்களது பொருள்களையும் அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதிக்குப் பொருள்களை எடுத்துவரும் தனியார் வர்த்தகர்களின் கூட்டம் ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

கப்பல் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கப்பலில் பொருள்களை ஏற்றுவோர் இனிமேல் அவற்றுக்கு தாங்களே காப்புறுதி செய்து கொள்ளவேண்டும் என்றும் —

சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனிகள் அவற்றுக்குக் காப்புறுதி உத்தரவாதம் வழங்க மாட்டா என்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேக நபர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 14

பத்திரிகையாளர் றிச்சாட் டி சொய்ஸாவின் கொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரான லால் ரஞ்சித் கொட என்பவரை சீ. ஐ. டியினர் நேற்று கொழும்பில் கைது செய்துள்ளனர்.

தனியார் வங்கி ஒன்றில் பிரதான பாதுகாப்பு அலுவலராக இவர் கடமையாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-21)

## செம்மாந்தீவில் படை நிலைகள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக். 14

மன்னார் மாவட்டம் செம்மாந்தீவில் படையினரின் நிலைகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதிகாலை 2.30 மணி முதல் 4.30 மணிவரை நீடித்த இத்தாக்குதலில் படையினர் தரப்பில் நால்வர் பலியாகினர்; 14 பேர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் விடயம்; ஐ. நா. செயலருக்கு மகஜர்

### பாதுகாவலர் சங்கம் அனுப்பியது

யாழ்ப்பாணம், ஒக். 14

குடாநாட்டில் கைதாகித் தகவல் தெரியாதுள்ள தங்கள் பிள்ளைகளின் நிலை குறித்து அரசிடமிருந்து தகவல் பெற்றுத் தருமாறு ஐ. நா. செயலாளர் நாயகத்திடம் கைதாகித் தகவல் தெரியாதோரின் பாதுகாவலர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் ஐ. நா. செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

கைதாகித் தகவல் தெரியாதுள்ளோர் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள ஐ. நா. மனித உரிமைக் குழு ஒன்றை இங்கு அனுப்பி வைக்குமாறும் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(மகஜரின் முழு விவரமும் பின்னர் உதயனில் வெளியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

**வண. J K. பிலிப்**

தலைமைப் போதகர்

சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்.

**இறைபணியில் 25 ஆண்டுகள்**

"மேலும் ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக்கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை"

எபி. 5 : 4

ஊழியர்கள், சபையார்.

**சீயோன் தேவாலயம்.**

(45091)

## கிரிக்கெற் பிரியர்களுக்கோர் நற்செய்தி!

**நெல்லியடி வாணியர் கழகம்**

நடத்தும்

20 ஓவர், 5 ஓவர் கொண்ட

**மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி - 1997**

விண்ணப்பக் கட்டணம் இலவசம்.

விண்ணப்ப முடிவுதிகதி:- நாளை **15 — 10 — 97** புதன்கிழமை இறுதி நாளாகும்.

விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்.**

நெல்லியடி. [சி/1741]

## கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்

மருத்துவ பீட சத்திர சிகிச்சை நிபுணர்

**தயாளன்** அவர்களின் தந்தையார்

**அதிவண. D. J. அம்பலவாணர்**

(முன்னாள் பேராயர்)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பீடாதிபதி, ஆசிரியர்கள், ஊழியர்கள்,

**மருத்துவபீடம்.**

[சி-1763]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

**திருமதி அன்னமுத்து அருளானந்தம்**

(நுணாவில் மேற்கு)

| **மண்ணில்:** | **விண்ணில்:** |
|---|---|
| 13 - 04 - 1915 | 14 - 09 - 1997 |

அன்பின் பிறப்பிடமாய், அறிவின் ஒளிவிளக்காய், பண்பின் பேராண்மையாய் இப்புவியில் வாழ்ந்து சிவபதமடைந்த குலவிளக்காம் எங்கள் பாசமிகு தெய்வம் எம் அன்னையார் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட நாளையொட்டி அன்னாரின் இல்லத்தில் 14-10-97 செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்கு சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறவுள்ளன. அதில் கலந்து கொண்டு, பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ள மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றி எம்மை மகிழ்விக்குமாறு உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இப்புனித நன்னாளில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டும், பல்வேறு வழிகளில் உதவிகளைச் செய்தும் எம்மைச் சிறப்பித்து ஆதரவளித்த சகல அன்பர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

செல்வி சுசீலா அருளானந்தம்
(சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்.)
அவர்களும் சகோதரர்களும்
மக்களும்

சேச் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(50523)

## செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு செயலகத்தில் நடைபெற விருக்கிறது.

முக்கிய சில விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் சகல பிரதேச செயலர்களையும், உதவி அரசாங்க அதிபர்களையும் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திர கும்ப திருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

ஆலயத்தில் விசேட அபிஷேகம், மாணவர்களின் கூட்டு வழிபாடு என்பன இடம்பெறுவதோடு விநாயகப் பெருமான் வீதியுலாவும் வருவார். (ஐ-17)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வைரவப் பெருமானுக்கு விசேட சாந்தி வைபவமும் படிக்கட்டு அபிஷேகமும் நடைபெறும்,

**New Science Academy**

நல்லூர்

**98 A/L**

**Accounting**

**திரு பாலவாசன்**

★ பங்குடைமை முடிவுக்கணக்கு ★

ஆரம்பம்: 17 - 10 - 1997

6-15 — 7-15 a.m.

(50525)

## உடன் விற்பனைக்கு

பிறிமா பேட்டுக் குஞ்சு சிவப்பு, வெள்ளையும், ஒருவாரம் நிரம்பிய சேவல் குஞ்சும் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமகள் பண்ணை களஞ்சியம்,**
418, கே.கே.எஸ். வீதி,
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(50527)

**A/L 98**

**Day Class**

**தூய / பிரயோக கணிதம்**

நடைபெறுகின்றன.

ஆசிரியர்:

**Mr. ஐங்கரன்** B. Sc.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**COLLEGE of COMMERCE**

நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(50525)

# கோப்பாய் பொலீஸ் நிலை மீது சனியன்று புலிகள் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 14

கோப்பாய் பொலீஸ் நிலையம் மீது கடந்த சனியன்று இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

புலிகளின் சிறு குழு ஒன்று பொலீஸ் நிலையத்தின் பதுங்கு குழி மீது தாக்குதல் நடத்தியதாகவும், பொலீஸார் திருப்பித் தாக்கியதும் அவர்கள் பின்வாங்கிச் சென்று விட்டதாகவும் 51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடன் உதவி

மல்லாகம், ஒக். 14

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் சேதமடைந்த வீடுகளுக்கு சீற் மற்றும் சிமெந்துக்கான கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி சேதமடைந்த வீடுகள் பற்றிய விவரங்களை அப்பகுதி கிராம அலுவலர்கள் சேகரித்து பிரதேச செயலகத்தில் கையளித்துள்ளனர். (ஐ-86)

## கண்ணீர் அஞ்சலி

பேராயர்

**அதிவண. D. J. அம்பலவாணர்**

அவர்களின் மறைவுச்செய்தியைக் கேள்வியுற்று மிகுந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், தென்னிந்திய திருச்சபை குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்

**தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்**

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
13-10-97

[C/1769)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபேத் அல்பிரெட்

(இளைப்பாறிய சிரேஷ்ட தாதி, மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை)

விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி எலிசபேத் அல்பிரெட் 12-10-97 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் திரு. ச. அல்பிரெட் (யூட்பார்மஸி, பண்டத்தரிப்பு) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சு. மேரி இமக்குலேற் சுபத்திரா, அ. அன்ரனி ஜீவேந்திரா சுரேஸ் (சுவிஸ்), யூட்சுதர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், றூபன், மலர், மாக்கிறேற், தேவநேசம், பிரான்சிஸ்கா, புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரோக்கியம்மா, மேரிதிரேசா, மேரிறெஜீனா, செபமாலைமுத்து (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திரு. இராசநாயகம், திரு. கைத்தாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. த. து. சுகுமாரின் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை) மாமியாரும், சு. சுஜந்தன், சு. சுவேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-10-97) செவ்வாய்க்கிழமை 12.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. அல்பிரெட்
(கணவர்)

கிறீன் வைத்தியசாலை அருகில்,
மானிப்பாய்.

(50507)

### திருமதி பாக்கியம் முருகேசு

(முன்னாள் அதிபர், யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் முருகேசு 13-10-97 அன்று ஆஸ்திரேலியாவில் இறைபதமெய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்து முருகேசு (பிரதம இலிகிதர், தபால் திணைக்களம், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகக் கொண்ட ஜெயபாலன், ஜெயதர்ஷனி, ஜெயகௌரி, ஜெயநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகராணி ஜெயபாலன், இராசையா இராஜலிங்கம், இராஜமுத்தையா முருகதாஸ், திலகரஞ்சனி ஜெயநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீகுமரன், கார்த்திகா, சேந்தன், குகன், ஸ்ரீசுசீந்திரா, சிந்து, பிரசன்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

தகவல்:
சு. சிவபாலன்
(பெறாமகன்)

15/4, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.

(50524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் மகாராணி இன்று அமிர்தசரஸ் செல்கின்றார்

புதுடில்லி, ஒக். 14

பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் அவரது கணவர் எடின்பரோ கோமகனுடன் நேற்று முன்தினம் இரவு புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இந்திய சுதந்திரப் பொன் விழா ஆண்டை முன்னிட்டு ஒருவாரகாலப் பயணமாக அவர் புதுடில்லி சென்றுள்ளார்.

இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையத்தில் அரச குடும்பத் தம்பதியருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அரசியார் ஜனாதிபதியையும், உப ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளார்.

இன்று அவர் அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலுக்குச் சென்று வழிபடுவார். பின்னர் ஜாலியன் வாலாபாக்கில் தியாகிகள் சின்னத்தில் மலர் வலையம் வைப்பார்.

ஜாலியன்வாலா பாக்கில் பிரிட்டிஷ் படையினர் 1919 இல் மேற்கொண்ட படுகொலைச் சம்பவத்துக்காக பிரிட்டிஷ் மகாராணி மன்னிப்புக் கோரவேண்டும் என இந்தியாவில் கோரிக்கைகள் எழுந்தமை தெரிந்ததே.

ஆனால் இந்தச் சம்பவத்துக்காக மகாராணி மன்னிப்புக் கோரமாட்டார் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

இன்று மகாராணி அமிர்தசரஸுக்குச் செல்லும் சமயம் சீக்கியர்கள் அங்கு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் மகாராணியுடன் வெளிவிவகார அமைச்சர் றொபின்குக்கும் புதுடில்லிக்கு வருகைதந்துள்ளார்.

மகாராணி தமது இந்திய விஜயத்தின் போது சென்னைக்கும் செல்லவுள்ளார்.

பிரபல நடிகர் கமலஹாசன் தயாரித்து நடிக்கும் ''மருதநாயகம்'' என்னும் தமிழ்த் திரைப்படத் தொடக்க விழாவிலும் மகாராணி கலந்து கொள்வார். (ஐ-5)

## பங்களாதேஷை புயல் தாக்கியது

டாக்கா, ஒக்.14

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிற்கு அருகிலுள்ள ஒரு நகரை பெரும் புயல் காற்று ஒன்று தாக்கியிருக்கின்றது.

டாக்காவுக்கு 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொங்கியு நகரில் வீசிய அந்தப் புயலில் குறைந்தது 20 பேர் வரை இறந்திருக்கக் கூடும் என்றும்- ஏறத்தாழ 500 பேர்வரை காயமடைந்திருக்கக் கூடும் என்றும்-அஞ்சப்படுகிறது.

ஒரு சில நிமிடங்களே நீடித்த அந்தப்புயல் அந்தநகரின் கடைத்தொகுதிகளை அப்படியே அடித்துச் சென்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

## அமெரிக்க முதற் பெண்மணிகள் 7 ஆவது உச்சி மாநாடு

பனாமா சிற்றி, ஒக். 14

அமெரிக்க முதற் பெண்மணிகளின் 7 ஆவது உச்சி மாநாடு கடந்த வியாழனன்று பனாமா தலைநகரில் நடைபெற்றது.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முதற் பெண்மணிகள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் முதற் பெண்மணி ஹிலாரி கிளின்ரன் அந்த மாநாட்டில் உரையாற்றினார்.

உலகெங்கும் உள்ள பெண்கள் அவர்களது நாடுகளில் அரசியலில் முழுப்பங்கினை ஆற்ற வேண்டும் என்று அவர் தமது உரையில் கேட்டுக் கொண்டார். (ஐ)

## அல்பா தீவிரவாதிகள் அஸாமில் தாக்குதல்

### நான்கு படை வீரர்கள் பலி

மத்திய றிசேவ் பொலீஸ் படையின் ரோந்து அணியினரை அல்பா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் மறைந்திருந்து தாக்கியதில் அஸாமில் நான்கு படைவீரர்கள் கொல்லப்பட்டனர்; 15 பேர் காயமுற்றனர்.

தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கிய இடத்திலேயே இந்த நால்வரும் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றி தகவல் தெரியவில்லை.

காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் படை வீரர்களில் ஆறு பேரின் உடல் நிலை மிக மோசமாக உள்ளது.

சம்பவ இடத்துக்கு மேலதிக பொலீஸ் படையினர் சென்றுள்ளனர். (இ-9)

## தென்கொரிய ஜனாதிபதியின் மகனுக்குச் சிறைத் தண்டனை

சோல், ஒக். 14

தென்கொரிய ஜனாதிபதியின் மகனுக்கு மூன்று வருட சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய ஜனாதிபதி கின்யங்சாங்கின் மகன் கின்சுங்சூள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தியதிலும் வரி செலுத்தாமல் ஏமாற்றியதிலும் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

அவருக்கு 15 லட்சத்து 70 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டதுடன் சட்டவிரோதமாக அவர் சேர்த்து வைத்திருந்த 5 லட்சத்து 69 ஆயிரம் டொலர் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

வர்த்தகர்களுக்கு சலுகை செய்வதற்காக அவர் பெருமளவு பணத்தை லஞ்சமாகப் பெற்றார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட நீதியரசர் தெரிவித்தார். (இ-9)

## ஜப்பானில் ரயில் விபத்து

ரோக்கியோ, ஒக்.14

ஜப்பானில் நிகழ்ந்த ரயில் விபத்தில் சுமார் 30பேர் காயமடைந்துள்ளனர்.

ரோக்கியோவுக்கு மேற்கே பயணிகள் ரயில் ஒன்று ஆள்கள் இல்லாத ரயிலோடு மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரயிலின் 4 பெட்டிகளும் தடம் புரண்டன. அந்த நான்கு பெட்டிகளில் மட்டும் 500-க்கும் அதிகமான பயணிகள் இருந்தனர். (ஐ-5)

## படகு விபத்தில் 40 பேர் பலி:

உத்தரப்பிரதேசம் சோனேய் நதியில் 65 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று தண்ணீரில் கவிழ்ந்தது.

40 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. 25 பேர் தண்ணீரில் நீந்திச் சென்று கரையேறினார்கள். (இ-9)

# புலிகள் மீதான அமெரிக்க தடை; 'புளொட்' கண்டித்து அறிக்கை

தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டி வந்ததற்கான காரணம் இன்னும் தீர்க்கப்படாததால் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் தொடர வேண்டியது அவசியமாகிறது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா தடைசெய்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புளொட் அமைப்பின் உப தலைவரும் அந்த அமைப்பின் இராணுவத்தளபதியுமான என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பு என அமெரிக்கா அறிவித்திருப்பது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்க அரசானது பெரும்பாலான நாடுகளில் காலை ஊன்றி வைத்துக் கொண்டு அந்த நாடுகளைச் சுரண்டி வருகிறது. அதற்கு ஏதுவாக அந்நாடுகளில் உள்ள சமூகங்கள், மதங்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி இரத்தக்களரியை உருவாக்கி அதன் மூலம் தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

மிகக் கொடிய பயங்கரவாத இயக்கங்களை தடை செய்துள்ளதாக அமெரிக்கா கூறுகிறது. அமெரிக்காவின் விருப்பு, வெறுப்புக்களுக்கு எடுபடாமல் தமது இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் இயக்கங்களை மட்டுமே அமெரிக்கா தடை செய்துள்ளது.

சர்வதேசக் கடற் பரப்பில் அத்துமீறிய புலிகளின் நடவடிக்கை; வெளிநாட்டுக் கப்பல்களைத் தாக்குதல்; வடக்கு — கிழக்கு வான்பரப்பில் சுயபலத்தினை ஏற்படுத்தி அச்சுறுத்தல்; இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தமை இவை தான் விடுதலைப்புலிகளைத் தடை செய்யக் காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன.

லிபிய கடாபியை, ஈராக் அதிபர் சதாம் ஹுசெயினை கொலை செய்ய குண்டு வீச்சில் ஈடுபடும் அமெரிக்கா ராஜீவ்காந்தி கொலையை வைத்து புலிகளைப் பயங்கரவாத அமைப்பு என்று கூறிவிட முடியுமா?

தமக்கு ஒத்துழைக்காத லிபியா, ஈராக், கியூபா போன்ற நாடுகள் மீது பொருளாதாரத் தடையை விதித்து அந்த நாட்டு மக்களை நசுக்குவது பயங்கரவாதம் இல்லையா?

சொந்த மக்களின் உரிமைக்காக போராடும் எந்த இயக்கத்தையும் தடைசெய்ய எந்த வித தகுதியும் அமெரிக்காவுக்கு இல்லை.

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல், அரபு நாடுகள் மீது குண்டு வீசி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பது அமெரிக்காவுக்குப் பயங்கரவாதமாகத் தெரியவில்லை.

எமது போராட்டத்தின் உயிர் நாடியான ஆயுதப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் தவறான இலக்கினாலேயே எமது போராட்டம் இந்த அளவுக்குக் கொச்சைப்படுத்தப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்திலாவது புலிகள் தமது தவறுகளில் இருந்து — பாஸிஸ வழியில் இருந்து — விடுபட சரியான முன்னெடுப்புக்களை எடுக்க வேண்டும். இதன் மூலம் அனைத்து தியாகங்களையும் அர்த்தமுள்ளதாக்கலாம் — என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## யாழ். மாவட்டத்தில் தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 14

யாழ்ப்பாணத்தில் தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமிக்க பொலீஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 12 பொலீஸ் நிலையங்களிலும் போதிய தமிழ் பொலீஸார் இல்லாததால் வாக்கு மூலங்கள் தமிழில் எழுதப் படுவதில்லை என்று வட மாகாண மீள் குடியமர்வு அதிகார சபைத் தலைவர் சோம பாலகுண தீர பொலீஸ்மா அதிபரிடம் தெரிவித்திருந்தார்.

அதனையடுத்தே யாழ்ப்பாணத்தில் உள்ள வெகுஜன ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்து தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (இ-21-3)

## தொலைக்கல்வி முறையில் தொடர்கல்விப் பாடநெறி.

### கல்வி நிறுவகம் ஆரம்பித்துள்ளது

அச்சுவேலி, ஒக். 14

ஆசிரியர் கல்வியில் ''ஆசிரியர் தொடர்கல்வி பாடநெறி'' என்ற புதிய பயிற்சி நெறி ஒன்றை தேசிய கல்வி நிறுவகம் தொலைக் கல்வி முறையில் ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் ஆரம்ப கணிதம், ஆரம்ப விஞ்ஞானம், உடல் நலக்கல்வி ஆகியவற்றைக் கற்பிப்பதில் நவீன உத்திகளை அறிமுகம் செய்து பாடவிதானத்தை பயன் தரும் முறையில் நடைமுறைப்படுத்துவதையும் —

மாறி வரும் பாடவிதானத்திற்கு இசைவாக ஆசிரியர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டும் புதிய பயிற்சி நெறியை தேசியகல்வி நிறுவகம் அறிமுகம் செய்துள்ளது.

இந்த ஒரு வருட காலப் பயிற்சி நெறிக்கான கற்றல் சாதனங்கள் தொலைக் கல்வி முறையில் அச்சிடப்பட்ட கற்கை சாதனங்கள் (மொடியூல்ஸ்) மூலம் சுய கற்கை செயல் முறையாக நடைபெறும்.

இதற்கென நியமிக்கப்பட்ட போதனாசிரியர்கள் மூலம் ஆசிரியர் தற்போது கடமையாற்றும் பாடசாலையிலேயே ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் பெறப்படும் சான்றிதழ் இலங்கை ஆசிரியர் சேவையில் தரம் உயர்த்தப்படுவதற்கு மேலதிக தகைமையாகக் கருதப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மீள் பயிற்சியாக வழங்கப்பட இருக்கும் இந்தப் பயிற்சி நெறியில் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் பெற்ற பின்னர் குறைந்தது ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இலங்கையில் யாழ்ப்பாணம் உட்பட 14 நகரங்களில் செயற்படும் தொலைக் கல்வி பிராந்திய நிலையங்கள் ஆசிரியர் தொடர் கல்விப் பாட நெறிக்கான கற்கை உதவிச் சேவைகளை வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## 'சீநோர்' தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 14

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையை விரைவில் இயக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடந்த அரச அதிபர்களின் கூட்டத்தில் வைத்து யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் குருநகர் சிநோர் வலைத் தொழிற்சாலையை இயக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தத் தொழிற்சாலையை இயக்க தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு முன்னோடியாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு மீன்பிடி அமைச்சு செயலாளருக்கு அக் கூட்டத்தில் வைத்து பணிப்புரை வழங்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் நற்செய்தி!

**ஆடை நீக்கிய சுத்தமான பசுப்பால்**
நுகர்வோருக்கு வழங்குவதற்கு எமது சங்கம் முன்வந்துள்ளது

ஒரு லீற்றர் ரூபா **16** ]
ஒரு போத்தல் ரூபா **12** ] மட்டுமே

தேவையானவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். தொடர்ந்து 10 லீற்றருக்கு மேலாக கொள்வனவு செய்பவர்கட்கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

**பொது முகாமையாளர்,**
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[சி/1745]


## கண்ணீர் அஞ்சலி

22 வருடங்கள் தென்னிந்திய திருச்சபையின் ஆயராக மனித நேயத்துடன் சேவையாற்றிய பெரும்பேராளர்

**அமரர் பேராயர் கலாநிதி**
**டி. ஜே. அம்பலவாணர்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

**வரணி விற்பனை நிலையப் பணியாளர்கள்.**

145, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(50511)

## கண்ணீர் அஞ்சலி

**கலாநிதி பேராயர் D. J. அம்பலவாணர்**

எமது தீவகத்தின் வளர்ச்சிப் பணிகளில் அக்கறையுடன் செயற்பட்ட எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள்
பேராயர் அருட்திரு D. J. அம்பலவாணர்
அவர்களின் மறைவை அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் பேராயரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடுந்தீவு மக்கள்

நெடுந்தீவு.
[50509]

## முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு: 11 — 06 — 1932
இறப்பு: 11 — 10 — 1996

**திருமதி வைத்திலிங்கம் பூமணி**
திதி: **14 - 10 - 1997**

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய எம் அன்புத் தெய்வமே! எம்மை விட்டு நீங்கள் சென்று ஆண்டொன்று ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உயிர் உள்ளவரை நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.
(50403)

## கால போக நெற் செய்கை ஆரம்பம்

தென்மராட்சி பிரதேசத்தில் பரவலாக மழை பெய்ததையடுத்து காலபோக நெற்செய்கைக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கானவேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-117)

## உடுப்பிட்டியில் பால் சாலை

நெல்லியடி, ஒக். 14

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கை ஊக்குவிற்கும் பொருட்டு வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் உடுப்பிட்டிச் சந்தியில் பால் சாலை ஒன்றை திறந்து வைக்கவுள்ளது. (இ-109)

## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 14

உரும்பிராயில் கடந்த வெள்ளியன்று மாலை இடம்பெற்ற மினிபஸ் — சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளை ஓட்டிச் சென்றவரான யோகராசா விஜயேந்திரன் (வயது 11) என்ற சிறுவனே படுகாய மடைந்தவராவார். இவர் சுய நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக்.14

புளொட் இயக்கத்தின் யாழ். மாவட்டப் பணிமனையில் நேற்று முன்தினம் நவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வெகுஜன அமைப்புக்களின்பிரதிநிதிகள் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் உட்படப் பல பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

புளொட் இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா விழாவில் கலந்து சிறப்பித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். (ஐ)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

அரியாலை, ஒக். 14

வீதிகளில் அநாதரவாகத் திரியும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் முழு வீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை யாழ். நகர், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலை, சுண்டுக்குளி பகுதிகளில் 50-க்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மாநகர சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ஐ-17)

## சிறுவர் முதியோர் தின விழா

கொழும்புத்துறை, ஒக். 14

யாழ். பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் தின விழாவும், சர்வதேச முதியோர் தினவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபரும் யாழ். பிரதேச செயலாளருமான து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (ஐ-30)


## வல்லிபுரத்தில்

தங்க ரதம் ஏறிவரும் தங்கக் கண்ணனே
எங்கள் துயர் திருமையா மாயக் கண்ணனே!

## வாணி ரெக்ஸ்

வஞ்சிக் குல மகளிர்
பஞ்சு நிகர் நெஞ்சமதில்
பட்டுப் பளபளக்கும்
பட்டாடை உலகம்
வெளிநாட்டு உடைகளுக்கு
குடாநாட்டில் ஓர் உதயம்:

**செல்வம் பான்ஸி** — இல. 10, நவீன சந்தை,
**வாணி ரெக்ஸ்** — இல. 11, நவீன சந்தை

சாவகச்சேரி.
(சி-1766)


## கண்ணீர் அஞ்சலி

**பேராயர் கலாநிதி டி ஜே. அம்பலவாணர்**

அவர்கள் மறைவினால் வாடும் அன்னாரின் குடும்பத்தினர்க்கும் உற்றார் உறவினர்க்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**Y. M. C. A. யாழ்ப்பாணம்.**

(சி/1765)

## கண்ணீர் அஞ்சலி

**பேராயர்**
**கலாநிதி D. J. அம்பலவாணர்**


எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய முன்னாள் பேராயர் கலாநிதி D. J. அம்பலவாணர் அவர்களின் மறைவை அறிந்து பெரும் வேதனை அடைகின்றோம்.

அன்னாரின் மறைவினாற் துயருறும் பேராயரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடுந்தீவு தென் இந்திய திருச்சபை

நெடுந்தீவு.
(50508)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் ஆறுமுகம் தம்பையா [ B. Sc. ]**
[ இளைப்பாறிய உப அதிபர்.
தேவரையாளி இந்துக்கல்லூரி ]

தோற்றம்: **12 - 07 - 1936**
மறைவு: **14 - 09 - 1997**

அப்பா!
நீங்கள் உள்ளபோது எமக்கு இல்லாதது ஒன்றுமில்லை.
நீங்கள் இல்லாதபோது எமக்கு ஒன்றுமேயில்லை.

14 - 09 - 97 அன்று கொழும்பில் காலமான எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14-10-97 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
[50517]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# தேர், சமுத்திர தீர்த்தோற்சவ சிறப்பு மலர்

**தேர்த்திருவிழா 14 - 10 - 97** | **தீர்த்தத்திருவிழா 15 - 10 - 97** | **கேணித் தீர்த்தம் 16 - 10 - 97**

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்

பக்தர்களின் பகையை நீக்க
மச்சாவதாரமாக வந்த
பரந்தாமன் வருகிறான்

# மச்சாவதாரியாக வந்து லவல்லியின் மடியில் குழந்தையாகிய கண்ணன்

## மனுக்குலத்தை மீட்க வல்லிபுரத்தில் கோயில் கொண்டான்

**தொகுப்பு: ச. தேவதாசன் B.A(Cey.)**
தர்மகர்த்தா

ஈழ வள நாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ். குடா நாட்டின் வடமுனையில், எழுவான் திசையில், ஸ்ரீதேவி, பூ தேவி சமேதமகா விஷ்ணு மூர்த்தியாம் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன் எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணன், வங்காள விரிகுடாவும் சமுத்திரமும் பாக்குத் தொடுவாய் என்னும் சிறு கடலாம் கற்கோவளம் பகுதியில் பால் சமுத்திரத்தில் மீனாக அவதரித்தார்.

சமுத்திரம் கலங்கியது; கொந்தளித்தது; கடலோரமாக வாழ்ந்த கடலோடிகள் மீனைப்பிடிக்க முயன்றனர். ஆனால் மீனைப் பிடிக்கச் சென்ற மரக்கலங்கள் நீரினுள் அமிழ்ந்தன. கரையோரமாக பெருந்திரளாக மக்கள் நாராயணன் புகழ் பாடிநின்றனர்.

லவல்லி எனும் பெயருடைய சிறந்த கன்னியொருத்தி, வைசிய குலத்தில் பிறந்தவள் முன்பு செய்த தவப்பயனின் விளைவாக பயங்கரமான பெரிய மீனாக வந்து கடலைக் கலக்கிய மச்சாவதாரி, சிறிய உருவில் லவல்லியின் மடியில் வீழ்ந்து குழந்தையாக மாறினான்.

லவல்லி புனிதையானாள். அவளுக்கிருந்த நாகசாபம்நீங்கியது. பின்பு அக்குழந்தை சக்கரவடிவமாக மாறியது. அச்சக்கர வடிவத்தை பல்லக்கில் வைத்து அவ்வூர் கப்பலோட்டிகள் காவி வந்தனர்.

கோவிந்த நாராயணன் பல்லக்கில் இருந்து கீழே விழுந்து உருக் கொண்டு பருத்தித்துறை, துன்னாலை வடக்கு, புலோலியம் பகுதியில் அமைந்துள்ள தலமான வல்லிபுரத்தில் மனுக்குலத்தின் மீட்சிக்காக கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

இப்புண்ணிய தலத்தில் மகோற்சவம் வருடாந்தம் வெகு சிறப்பாக விழா எடுக்கப்படுகின்றது. இந்த வருடமும் வழமைபோல் 30-09-97 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்த உற்சவத்தில் மிக விசேட நாள்களாக இன்று (14-10-97) தேர்த் திருவிழாவும், நாளை (15 - 10 - 97) சமுத்திரத் தீர்த்தமும், வியாழக்கிழமை (16 - 10 - 97) கேணித்தீர்த்த திருவிழாவும் நடை பெறுகின்றன. இறுதி நாளாம் (17 - 10 - 97) ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஞ்சநேயர் மடையுடன் உற்சவம் நிறைவுபெறும்.

அத்துடன் இவ் வருடம் திருவிழாக் காலங்களில் நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதன் தலைமையில் கலைஞர்கள் சிறப்பு மேளக்கச்சேரிகளை நடத்துகின்றார்கள்.

### சமுத்திர தீர்த்தத்தின் சிறப்பு

புரட்டாதி மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் கோதுணி முகூர்த்தத்தில் ஆதவன் அந்தி சாய்ந்து மேற்கே அஸ்தமிக்க, பூரண சந்திரனின் குளிர் ஒளியின் உதயத்தில் தொண்டர்கள் புடைசூழ எம் பெருமான் பாற்கடலில் தீர்த்தமாடுவான்,

''எங்கள் பாவங்களை பார்த்தசாரதி நீக்கி விட்டான். வினைகளை நீறாக்கி விட்டான். நாம் புனிதரானோம். பாவ விமோசனம் பெற்றோம். பாண்டுரங்கன் ஆடிய நீரில் நாமும் நீராடுவோம். தீர்த்தோம் தீர்த்தோம் எம்வினை தீர்த்தோம். நாம் வாழ்க்கையில் பெறக்கரிய புண்ணிய நாள்கள் இவை. பிறவியெடுத்தால் பெரும் பயனை இத் தினத்தில் பெறுகின்றோம்'' என்று பக்தர்கள் முழக்கம் செய்வார்கள்.



ஜல சந்தியில் புனித ஸ்நானம் செய்யும் பொருட்டு படமெடுக்கும் பாம்பின் மேல் படுத்திருந்து, வெண்மணல் பரப்பின் மேடுகளூடாக பக்தர் வெள்ளத்தினூடாக சக்கர ஆழ்வார் செல்லும் காட்சியை கண்டு மக்கள் ஆனந்தமடைகின்றார்கள்.

இப் புனித பௌர்ணமி நாளிலேயே மகா விஷ்ணு மூர்த்தி வங்கச் கடலில் மச்ச அவதாரம் எடுத்து சக்கர வடிவில் வல்லிபுரத்தில் தரித்திருப்பதாக தட்சண கைலாச மான்மீய சரித்திரம் கூறுகின்றது.

இலங்கைத் திருநாட்டில் எங்கும் இல்லாத வண்ணம், எல்லா விதமான ஆகம விதி முறைக்குட்பட்ட இலக்கணமாய் அமைக்கப்பட்ட ஏழுதள இராஜகோபுரம் 71 அடியில் நிமிர்ந்து நின்று வடமறவர் ஆட்சியின் சிறப்புக்கு சான்று பகர்வதாக காட்சி தருகின்றது.

மேலும் எமது ஆலயத்தில் விசேடமாக இரண்டு வகை தீர்த்தோற்சவங்கள் நடைபெறுகின்றன. ஒன்று சமுத்திரத் தீர்த்தமும், மற்றையது மறுநாள் ஆலய நீர்த் தடாகத்தில் சக்கர ஆழ்வார் தீர்த்தமாடுதலும் ஆகும். இவற்றை மக்கள் முறையே கடற் தீர்த்தம் என்றும் நன்னீர் தீர்த்தம் என்றும் சொல்வார்கள். காக்கும் கடவுளாம் கண்ணனின் மகா மஹோற்சவங்கள் இனிதே சிறப்புற நிறைவேறி மக்களுக்கு அருள் கிடைக்கிறது.

மங்களம் மங்களம் மங்களம்.

## பிரதான குருமார் ஆசியுரை

''கோவிந்த நாம சங்கீர்த்தனம்''
''கோவிந்தா ஹரி கோவிந்தா''
மெய்யன்பர்களே!

நித்திய பூசையில் ஏற்படும் தவறுகளைப் போக்குவதற்காகத்தான் நைமித்தியம் எனப்படும் மஹோற்சவம் நடத்தப்படுகிறது. ஸ்ரீ வல்லிபுர மாயவனுக்கு தற்போது மஹோற்சவம் நடைபெறுகின்றது.

இம் மஹோற்வசத்தின் சிறப்பம்சம் தேர்த்திருவிழாவாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்கது சமுத்திர தீர்த்தமாகிய அனுமார் தீர்த்தமாகும்.

லவல்லியின் குழந்தை இல்லாக்குறையைப் போக்குவதற்காக வங்கக் கடலிலே மச்சமாகத் தோன்றி சக்கராயுதமாக மாறிய வல்லிபுர மாயவனை துதிக்கும் பக்தர்கள் அன்று கூடுவர்.

புரட்டாதி பூரணை தினத்திலே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சமுத்திரக் கரையிலே திரண்டு வந்து ஸ்ரீ வல்லிபுர சக்சர மாயவனை தரிசனம் செய்து தங்கள் துன்பதுயரங்கள், கஷ்ட நஷ்டங்களைப் போக்கிக் களைந்து இன்புறுவர்.

இவ்விரு புனித நாள்களிலும் எல்லாம் வல்ல காத்தற் கடவுளாகிய திருமாலின் சக்கராயுதத்தை வழிபடும் பக்த கோடிகளுக்கு எமது உளப்பூர்வமான, உணர்வு பூர்வமான நல்லாசிகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

''நாராயணன் நம்பிக்கை நயமிகும்''
பிரம்மஸ்ரீ ச. க. புருஷோத்தமக் குருக்கள்
பிரம்மஸ்ரீ. ச. க. சுதர்சனக் குருக்கள்,
பிரதான குருக்கள்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

## காக்கும் கடவுளே, எங்கள் கண்ணா!

கண்ணா! எங்கு நோக்கிலும் என்ன கேட்கிலும்
என்னைக் காணலாம் என்றாய், மணிவண்ணா!
நாம் ஒன்று நோக்கினோம் ஒன்று கேட்கிறோம்
உன்னை மட்டுமே காக்கும்கடவுளே, எங்கள் கண்ணா!

வை. ஆனந்தராசா.
(தொண்டர்கள் சார்பாக)

**சிறப்பு மலர்**
ஏற்பாடு:
த. ஜெயக்குமார்
ஆ. ஜெயக்குமார்
அமைப்பு: உதயன் வடமராட்சி செய்தியாளர்


**பரந்தாமன் பெருவிழாக்கள் சிறப்புற இறைஞ்சுவோர்:**

**ராஜன் சைக்கிள் வேக்ஸ்** பிரதான வீதி, பருத்தித்துறை
**ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்** பஸ் நிலையம், பருத்தித்துறை
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்** பிரதான வீதி, நெல்லியடி
**சுதர்சனம் பேக்கரி** பிரதான வீதி, நெல்லியடி
**அம்பாள் அரிசி ஆலை** தும்பளை வீதி, பருத்தித்துறை
**கண்ணபிரான் ஸ்ரோர்ஸ்** பிரதான வீதி, பருத்தித்துறை
**ஈஸ்வரி நகை மாளிகை** பிரதான வீதி, பருத்தித்துறை
**ஜமுனா ஸ்ரோர்ஸ்** பிரதான வீதி, நெல்லியடி
**ஜனனி நகை மாளிகை** பிரதான வீதி, பருத்தித்துறை
**லிபேட்டி மோட்டோர்ஸ்** பஸ் நிலையம், நெல்லியடி
**ராகுலசூரியன்ஸ் புடைவை மாளிகை** பிரதான வீதி, பருத்தித்துறை
**செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை** பிரதான வீதி, நெல்லியடி
**நித்திய கல்யாணி பான்சி ஹவுஸ்** பிரதான வீதி, பருத்தித்துறை
**மயூரன் வண்ணச் சோலை** பிரதான வீதி, பருத்தித்துறை
**சிவன் அச்சகம்** சிவன் வீதி, பருத்தித்துறை
**ராணி பேக்கரி** ஓராங்கட்டை, பருத்தித்துறை.
**சுசிலா ஆபரண மாளிகை** பிரதான வீதி, பருத்தித்துறை
**குலம் ஐஸ்கிறீம் ஹவுஸ்** அரசடிச் சந்தி, மானிப்பாய்
**சுகுணலக்ஷ்மி புடைவை அகம்** பிரதான வீதி, பருத்தித்துறை
**மதுசூதனன் அழகு அங்காடி** புலவடிச்சந்தை முன்பாக, மந்திகை
**குணம் குளிர்களி அகம்** பஸ்நிலையம் பருத்தித்துறை.
**சுசில் ரெக்ஸ் ரைல்ஸ்** பிரதான வீதி, பருத்தித்துறை
**வாணி நகை மாளிகை** பிரதான வீதி, மருதடி பருத்தித்துறை
(சி/1762)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய வீடியோ கமரா (Panasonic மொடல் 9000) புதிய வீடியோ கசட், டெக் (Panasonic) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 9/1, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். [சி/1760]

பிறிமா கைலையின் பிறவுண், வெள்ளை பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 17-10-97 அன்று ஒருநாள் குஞ்சும், 29-10-97 அன்று ஒரு மாதக் குஞ்சும் விற்பனைக்குண்டு. முன் கூட்டி பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு:- சே. கிருஷ்ணகுமார், சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக) அல்லது கண்ணா வீடியோ சென்ரர், உடுவில். [50498]

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் பயில புதிய பிரிவு ஆரம்பம். ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதி. ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, (M L.S. LONDON), 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [50466]

### மில்க்வைற்

மில்க்வைற் நீலசோப் 7/50, அரைக்கட்டி 4 ரூபா, பார்சோப் 20 ரூபா, சலவைப் பவுடர் 6/50, வேப்பம் புண்ணாக்கு, அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மேலுறைகளைக் கொடுத்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற் செய்தி. [சி/1764]

### தவறிவிட்டன

மாசிலாமணி மோகன் என்பவரது 0907022605 இலக்கம் கொண்ட விசேட அட்டையும், மோகன் சுமதி என்பவரது 0907023503 இலக்கம் கொண்ட விசேட அட்டையும் உரும்பிராய்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். காந்திஜீ ச. ச. நிலையம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். [50480]

சிவலிங்கம் பூபதி என்பவருடைய 277240025V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை கொட்டடி வீதிக்கும், கலட்டி பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். C/o M.இராசரத்தினம், இணுவில் தெற்கு, இணுவில், சுன்னாகம். [50499]

---

உ

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

## வருடாந்த பரிசளிப்பு விழாவும் தாபகர் நினைவு தினமும்-1997

**காலம்: 15-10-1997 புதன்கிழமை**
காலை 8-30 மணி

**இடம்: கல்லூரி மண்டபம்**

**தலைவர்: திரு. மா. சண்முகரத்தினம்** (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திரு. சி. சிவராசா அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம் - 2)

சிறப்பு விருந்தினர்:
திரு. ஆ. இராசேந்திரன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)


பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வாழ்த்துபவர்:
**ஈஸ்வரி மரக்காலை**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி
(50470)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி **செல்வராசா யசோதா**
(உயிரியல் விஞ்ஞான மாணவி சாவ./ மகளிர் மகா வித்தியாலயம்)
தாயின் மடியில்: 29-06-1976

அமரர் **கந்தையா செல்வராசா**
(உதயன் மரக்காலை)
தாயின் மடியில்: 18 12-1954

செல்வி **செல்வராசா சுஜாதா**
(O/L மாணவி சாவ./ இந்துக்கல்லூரி சங்கத்தானை)
தாயின் மடியில்; 20-07-1977

காலனின் பிடியில்: 28-09-1993
**திதி: 14-10-1997**

பாரினிலே எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டுவிட்டுப்
பாலகன் ஒருவனையே பக்கமாக நிற்க விட்டுப்
பந்த பாசத்துடன் பாசமலர்களுடன் கூடியங்கே
சென்றது தான் ஏனய்யா? தேடித் தான் அலைகின்றோம்.

கைநீட்டி நாம் வாழாமல், பாதை ஒன்றை வகுத்துவிட்டு
வாடா மலர்களுடன் வானகம் தான் சென்றதென்ன?
நாம் வாடி வதங்குகின்றோம் ஆறுதல்தான் கூறி விட
ஆண்குஞ்சை விட்டுவைத்தீர்
ஆனாலும் எம் மனம் தான் ஆறுதல்தான் அடைந்திடுமோ?

சிட்டாய் சிறகடிக்கும் சிங்கார வயதினிலே
சிரித்த முகம் காட்டி எங்கள் சிந்தை குளிரவைத்த
சிங்கார மயில்களம்மா — சிதையாத
சிற்பிகள் நீங்களம்மா

நாம் போகும் இடங்களெல்லாம் ஒளிப்பிளம்பாய்
நின்று நீங்கள் நல்லவழி காட்டுகின்ற
நற்தெய்வம் நீங்களம்மா
கரம் நீட்டி அறம் செய்யும் தேவதைகள் நீங்களம்மா
வீதியிலே செல்கின்ற சின்னஞ் சிறுசுகளோ
உங்களைத்தான் தேடுதம்மா
சென்ற இடங்களெல்லாம் உங்கள் செயல் பேசுதம்மா
கல்லூரி வாசலெல்லாம் உங்களடி தேடுதம்மா

நான்காண்டு போனதம்மா நம் கவலை மாறவில்லை
பாவிகள் எங்களைத்தான் பாதியிலே விட்டுவிட்டு
சிவனவன்தான் அழைத்துவிட மூவருமே சென்றதென்ன?
நினைக்கின்ற நேரமெல்லாம் நெஞ்சமோ வெடிக்குதய்யா
நித்தம் கலங்குகின்றோம் நிம்மதி இல்லையய்யா
மூவரின் திருமுகத்தை இனி என்று காண்போமோ?

இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இவர்களுடன் அகால மரணமடைந்த ஏனையவர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மனைவி:- செ. மங்கையர்க்கரசி (உதயன் மரக்காலை)
தாய், சகோதரன், மகன் செ. உதயராசா (கனடா),
உற்றார், உறவினர்.

சங்கத்தானை, சாவகச்சேரி.
(50412)

---

# ஓராண்டு நினைவு



தோற்றம்: 8 — 02 — 1952

மறைவு: 14 — 10 — 1996

## அமரர் முருகேசு ஜெயராஜசிங்கம்

(பண்ணாகம் மேற்கு, சுழிபுரம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தொழில் நுட்பவியலாளர்)

திதி ஓராண்டு: **1997 - 10 - 14**

மனைவி, பிள்ளைகள்,
சிறிய தாய்மார், சகோதரிகள்,
மைத்துனர், சகோதரிகள்.

திரு. திருமதி குமாரசாமி
பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்
(50390)

---

# 25-வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 03 — 1910

மறைவு: 14 — 10 — 1972

## அமரர் சபாரட்ணம் சூரசங்காரன்

(யாழ். திவ்ய ஜீவன சங்க உப தலைவரும், சட்டத்தரணியும்)

இறைவன் திருவருளால் சாதுக்களைச் சந்தித்து, இமய ஜோதியாம் சுவாமி சிவானந்தரை குருவாக அடைந்து பூரண சரணா கதியுடன் குரு மந்திரத்தைப் பெற்று தீவிர பக்தியுடன் அவர் கட்டளைகளை நிறைவேற்றி வாழ்ந்து, வழி காட்டிய தங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்கா.

யாழ். திவ்ய ஜீவன சங்கத்தினரும்,
உறவினர்களும்.

''அருளகம்''
46, வைமன் வீதி,
நல்லூர்.
(சி/ 1734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அகதிகளா கைதிகளா?

வவுனியா நகரில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் பூரண வெற்றி அளித்ததாகவும் நகரம் நேற்றுச் செயல் இழந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

ஹர்த்தாலை நடத்துவதற்காக புளொட் அமைப்பு முன் வைத்த நான்கு கோரிக்கைகளில் கீழ்க் கண்ட இரண்டும் அடங்கும்.

★ வவுனியா அகதி முகாம்களில் — தடுப்பு முகாம்களில்— உள்ளவர்களை விடுவித்து அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச்செல்ல ஏற்பாடு, வசதி செய்யவேண்டும்.

★ வவுனியாவில் தங்குவதற்குவதிவிடப் பாஸ் வழங்குவதை இலகுவாக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்தவர்களையும், வன்னி மக்களையும் வவுனியாவுக்கு வருமாறு 1996 ஒக்ரோபரில் அரசாங்கம் 'வருக வருக' என்று அழைத்தது. பூரண கும்பம் வைத்து வாழை தோரணம் கட்டி, விபூதி, சந்தனம் கொடுத்து வரவேற்பதுபோல வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ''அன்புடன்'' அழைப்பிதழ் அனுப்பியது.

அந்த அழைப்பை நம்பி, பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் குடும்பமும் குட்டியுமாக, வன்னிப்பகுதியிலிருந்து தாண்டிக்குளத்தையும் தாண்டி, வவுனியா நகரைச் சென்றடைந்தனர்.

இவர்களில் ஒரு சாரார் குடாநாட்டுக்குத் திரும்ப விரும்பினர். இன்னொரு சாரார் வவுனியாவில் உள்ள தங்கள் உறவினர்களோடு தங்குவதற்கு விரும்பினர். மூன்றாவது தரப்பினர் கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களுக்குச் சென்று உறவினர்களுடனோ அல்லது தனித்தோ வாழ விரும்பினார்கள்.

ஒருவர், தமக்குப் பாதுகாப்பான, வசதியான இடம் எது என்பதனை முடிவு செய்யவும், அங்கு வாழவும் உரிமை உடையவர். அது அவரது தனிப்பட்ட வாழ்வுக்கான அடிப்படை உரிமை.

ஆனால் வன்னியிலிருந்து வவுனியா சென்றடைந்த மக்கள், அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்லவோ தமக்கு வசதியான இடத்தில் தங்கவோ அனுமதி வழங்கப்படவில்லை. பாதுகாப்புக் காரணம் என்ற பச்சை குத்தி அவர்களை முகாம்களில் தடுத்து வைத்துள்ளது அரசு!

பெரும்குற்றஞ் செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைதானவர்களைக் கூட, அதற்கான ஆதாரமில்லாவிடில் ஆகக் கூடியது மூன்று மாதங்களே தடுத்து வைக்கலாம் என்கிறது சட்டம்.

ஆனால், ஒரு வருடத்துக்கு மேலாகவும் ஆயிரக் கணக்கான மக்கள் வவுனியா தடுப்பு முகாம்களில் கைதிகள் போலத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசு வசதிகளைச் செய்வதாகக் கூறினாலும், ஒருகைதியின் உணர்வோடு நலன்களைக் கழித்துக் கொண்டு வாழ்வது இயல்பான, சுதந்திரமான வாழ்க்கையாகுமா?

இவர்களை விடுவிப்பதற்கும், பாஸ் வழங்குவதற்கும் தரகர் முறை இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணம் தேடுவதற்குத் துணையாகக் கெடுபிடிகள், புதுவிதிகள் வருவதாகவும் சொல்லப்படுகிறது.

அகதிகளைத் தடுத்துவைத்து இம்சைப்படுத்தாமல் அவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மனிதாபிமான, மனித நேயப்பிரச்சினை என்பதனைத் புறந்தள்ளக் கூடாது.

# நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றால் யுத்த நிறுத்தம் பற்றி ஆராயலாம்

## அமைச்சர் அனுருத்த சொல்கிறார்

கொழும்பு, ஒக். 14

பேச்சு நடத்த அரசு விதித்துள்ள நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்று நடந்தால் யுத்த நிறுத்தம் பற்றி ஆராயப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

சில சமயங்களில் யுத்த நிறுத்தம் இல்லாமலேயே பேச்சுக்கள் நடக்கலாம். விடுதலைப் புலிகளின் இதய சுத்தியான பங்களிப்பிலேயே அது தங்கியுள்ளது.

பேச்சு வார்த்தை என்று காலத்தைக் கடத்தாமல், கால நிர்ணயம் செய்து, நீதி, நேர்மையுடன் பேச்சுக்கள் இடம் பெற வேண்டும்.

தற்போது நடக்கும் யுத்தம் எந்தத் திகதியில், எந்த மாதத்தில் முடியும் என்று காலக்கெடு விதிக்கமுடியாது. ஆனால் விரைவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த அரசு விரும்பவில்லை.

விடுதலைப்புலிகள் பேச்சுக்கு வரும்போது அவர்கள் முன் சமர்ப்பிக்க தீர்வுத் திட்டம் தயாராக இருக்க வேண்டும் — என்றார்.

(ஐ-21-3)

# வெளி மாவட்ட விலைக்கு குடாநாட்டில் கட்டடப் பொருள்

## ஏற்பாடு செய்து தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்டத்தில் துரிதமாக மீள் குடியமர்வு இடம் பெற்ற போதும், மீளக்குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்றியுள்ளனர். அவர்கள் தமது இருப்பிடங்களைப் புனரமைக்க ஏனைய மாவட்டங்களின் விலைக்கு யாழ்ப்பாணத்திலும் கட்டடப் பொருள்களை விற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய இணையப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:

★ மீளக் குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளில் மின்சார விநியோகமும் ஒன்று. அவர்கள் விவசாய முயற்சிகளிலும்,சிறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட வசதியாக அவர்களுக்கு மின்சார விநியோகம் செய்யப்பட வேண்டும். தற்சமயம் முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லை. இரவில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்சாரம் வழங்கப்படுகிறது.

★ யாழ். வீதியில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப் படவில்லை. பாரிய திருத்தங்களை மேற்கொள்ள பெரிய றோலர் இல்லாத நிலை நிலவுகிறது பாரிய அளவில் வீதிப்புனரமைப்பை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப் பட வேண்டும்.

★ விவசாய உள்ளீடுகள் போதியளவு கிடைக்காததால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர் குறைவான பரப்பளவில் கூடுதல் உரத்தைப் பயன்படுத்தி கூடுதல் விளைவைப் பெறுவதே விவசாயிகளின் நோக்கமாகும் இந்த நோக்கத்தை அவர்கள் எட்ட போதியளவு உரத்தைப் பெற முடியாதுள்ளது. போதியளவு உரத்தை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ குடாநாட்டில் பலஇடங்களில் போக்குவரத்து பாதைகளில் குறுக்கே தடைகள் போடப்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தடைகளில் செல்வதால் வாகனங்களுக்குச் சேதம் ஏற்படுகிறது.

★ குடாநாட்டில் பனை, தென்னை, பலா, வேம்பு போன்ற மரங்கள் தறிக்கப் படுவதால் சுற்றாடல் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே இதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(இ-3)

# அமெரிக்கக் குழு கொழும்பு விஜயம்

அமெரிக்க அதிகாரிகள் குழு ஒன்று இலங்கை இராணுவத்துக்கு வெளிக்களப் பயிற்சிகளை அளிப்பதற்காக கொழும்பு வந்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் இது போன்ற குழுக்கள் மேலும் மூன்று தடவைகள் கொழும்புக்கு வரும் என்றும்—

படையினருக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதற்காக இவர்கள் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# அடுப்பில் எண்ணெய் ஊற்றிய பெண்ணின் உடலில் தீபற்றியது!

யாழ்ப்பாணம், ஒக். 14

புகைந்து கொண்டிருந்த அடுப்புக்குள் மண் எண்ணெயைக் கானுடன் ஊற்றிய போது திடீரெனத் தீ பற்றிக் கொண்டதால் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கரவெட்டி கிழக்கில் நேற்று முன்தினம்காலைஇடம்பெற்ற இச் சம்பவத்தில் ஜெயசீலன் தேவரஞ்சினி (வயது 25)என்பவரே தீக் காயங்களுக்கு உள்ளானார்—

இவரது உடலில் தீ பற்றியதும் அவருக்கு உதவச் சென்ற அவரது தாயாரான அந்தோனிப்பிள்ளை பென்றோஸ் (வயது 50) என்பவரும் தீக் காயங்களுக்கு ஆளானார்.

காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் இருவரும் பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். (ஐ-9-15)

## நாளை

**புரட்டாதி 29**

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி
நண்பகல் 12.07 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி
பிற்பகல் 1.39 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 4.32-6.02

இராகுகாலம்: 12.02-1.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# தொலைத் தொடர்பு நிலையம் இயங்காது

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம் இன்றும் நாளையும் இயங்கமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள கருவிகளை பண்ணையில் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்துக்கு மாற்றும் பணிகள் நடைபெற விருப்பதாலேயே இவ்விரு நாள்களும் அங்கு பணிகள் நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சாவகச்சேரி மருத்துவமனையில்

# 3 ஆயிரத்து 236 பேருக்கு மலேரியா சிகிச்சை

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 236பேர் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக ஆஸ்பத்திரி மலேரியாத் தடுப்புப் பிரிவு புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

இந்தக் காலப்பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரில் 8 ஆயிரத்து 154 பேரின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்ட போது மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 236 பேரில் 284 பேர் மூளை மலேரியாவினாலும், 15 பேர் கலப்பு மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டது தெரியவந்துள்ளது.

மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் வன்னியிலிருந்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# முருங்கன் பொலிஸ் நிலைய தாக்குதலில் 6 புலிகள் களப்பலி

வவுனியா, ஒக். 14

மன்னார் — முருங்கன் பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் தாம் மேற்கொண்ட தாக்குதலில் தமது தரப்பில் 6 பேர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் ஓர் அதிகாரியும், 6 படையினரும் உயிரிழந்ததாகவும் — 14 படையினர் காயமடைந்ததாகவும் — புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-3)

## காங்கேசன்துறைப் பகுதியில்

# புதைத்து வைத்த பணம், நகை ஏழு வருடங்களின் பின் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 14

காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள வீட்டில் பாதுகாப்பாகப் புதைத்து வைத்திருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் என்பன சுமார் 7 ஆண்டுகளின் பின் அங்கிருந்து மீட்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமது வீட்டின் கிணற்றடிப் பகுதியில் புதைத்து வைத்த மேற்படி பொருள்களை அவற்றின் உரிமையாளரான தமிழ் தம்பதியர் எவ்வித இழப்பும் இன்றி கடந்த 11 ஆம் திகதி மீளப்பெற்றுக் கொண்டதாக 51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் காங்கேசன்துறைப்பகுதியில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததும் இவர்கள் தமது நகைகளையும், உறவினர்களுக்குச் சொந்தமான நகைகளையும் சேர்த்து மொத்தம் சுமார் 85 பவுண் நிறையுள்ள நகைகளில் ஒரு பகுதியை பொலித்தீன் உறைகளில் இட்டு தாம் வசித்த வீட்டின் கழிவறைக்குப் பின்புறத்தில் புதைத்துள்ளனர். எஞ்சிய தொகுதி நகைகளையும் சுமார் ஒரு லட்சம் ரூபா பணத்தையும் அவ்வாறே பொலித்தீனால் பொதி செய்து பிளாஸ்ரிக் போத்தலில் இட்டு தமது வளவில் மரம் ஒன்றின் கீழ் புதைத்தனர்.

பின்னர் அப்பகுதியில் இருந்து அவர்கள் இடம் பெயர்ந்துவிட்டனர்.

கடந்த செப்ரம்பர் மாதம் 9 ஆம் திகதி ''உதயன்'' பத்திரிகையில் ஒளித்து வைக்கப்பட்ட நகைகளும் பணமும் இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்ட ஒரு சம்பவம் தொடர்பான செய்தி வெளியாகியிருந்தது. அதனை வாசித்த மேற்படி உரிமையாளர்கள் தாம் ஒளித்து வைத்த பொருள்களின் விவரங்களைக் குறிப்பிட்டு 51 ஆவது படையணிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தனர்.

அதனையடுத்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அவர்களின் வீட்டுக்குச் சென்ற படையினர் அங்கு பணமும் நகையும் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடங்களில் நிலத்தைத் தோண்டி நகைகளையும், பணத்தையும் மீட்டனர். பணக் கட்டுக்குள் நீர் புகுந்ததால் அவை பழுதடைந்து காணப்பட்டன.

தற்போது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வசித்துவரும் இந்தத் தமிழ் தம்பதியர் சமர்ப்பித்த பட்டியலின்படி மீட்கப்பட்ட நகைகள் அவர்களுடையவை தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தமது பெயரை வெளியிட விரும்பாத இத் தம்பதியினர் தமது பொருள்கள் அனைத்தும் குறைவின்றிக் கிடைத்ததால் பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர் — என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை 4 ஆம் கொலனி மக்களை மீளக்குடியமர்த்த ஏற்பாடுகள்

மட்டக்களப்பு, ஒக். 14

அம்பாறை மத்திய முகாம் 4 ஆம் கொலனியைச் சேர்ந்த கிராம வாசிகள் விசேட அதிரடிப்படை மற்றும் பொலீஸ் கூட்டுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு மீண்டும் அங்கு குடியமர்த்தப்படவுள்ளனர்.

மத்திய முகாம் 4 ஆம் கொலனி கிராமத்தில் கடந்த மாதம் 24 ஆம் திகதி கிராம வாசிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 6 பேர் பலியானதும், 47 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும் தெரிந்ததே. இச்சம்பவத்தை அடுத்து அங்கிருந்து வெளியேறிய 396 தமிழ் குடும்பங்கள் சேனைக் குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியுள்ளன.

பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கூட்டாகப் பாதுகாப்பு வழங்க உத்தரவாதம் தந்தால் தாம் மீண்டும் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குச் சென்று வசிக்கத் தயார் என்று இவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த அகதிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய அம்பாறை மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஏ. எல். விக்கிரம தலைமையில் நேற்று மாநாடு ஒன்று நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி மத்திய முகாம் 4 ஆம் கொலனியில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு அவர்களது வீடுகளைத் திருத்துவதற்கும், போக்குவரத்துச் செலவுகளுக்கும் எனத் தலா 10ஆயிரம் ரூபா வழங்கப்படும். அத்துடன் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகஅங்கு உள்ளபொலீஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படை பிரிவு ஒன்றும் இயங்கும். (ஐ-21)

# சிறு குழுக்களாகப் பிரிந்து தாக்கும் படையினர்

கொழும்பு, ஒக். 14

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து சென்று தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

புளியங்குளத்துக்கு கிழக்கே படையினரின் பந்தோபஸ்து நிலைகள் மீது புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

படையினரும் பதிலுக்கு பீரங்கித் தாக்குதலை நடத்தினர். — என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# தீர்வுத் திட்ட வரைவு இன்று தெரிவுக்குழுவிடம்

கொழும்பு, ஒக். 14

அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் இன்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் முழு வரைவுகளையும் நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இன்று வெளியிடவுள்ளார்.

அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழுவின் இறுதியான இரு கூட்டங்களில் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இன்று தெரிவுக்குழு கூடும் போது அதிகாரப் பரவலாக்கல் திட்டம் தொடர்பான ஐ. தே. கட்சியின் கருத்து வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்)

வவுனியாவில் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள வடபகுதி அகதிகளை அங்கிருந்து விடுவித்து அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யுமாறும்—

வவுனியாவில் வதிவிடப் பாஸ் வழங்கும் நடைமுறையை இலகுவாக்குமாறும் —

யாழ். மாவட்டத்தில் கைதாகித் தகவல் தெரியாது உள்ளவர்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் —

கொழும்பு மற்றும் பகுதிகளில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதை நிறுத்துமாறும் —

கோரியே இந்தக் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. (உ-3)


## கருத்தரங்கு

பொருள்:

**தொடர்புகளின் ஊடாக உறவு**
**( Communication )**

வழங்குவோர்:

**அருட்திரு. பிரான்சிஸ்டானியல் அ.ம.தி.**
**அருட் திரு. S. J. இராஜநாயகம்**

காலம்:

**15-10-97 புதிய நேரம் பி.ப. 3 மணி**

இடம்:

**" அகவொளி "**
**குடும்பவளத்துணை நிலையம்,**
**131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.**

நிகழ்வில் கலந்து பயன்பெற வாரீர்!

**- இயக்குநர்**

(50501)


## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்)

காயமடைந்தனர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது 10 புலிகள் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் இருவரது சடலங்களையும், ரீ—56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு, 4 கிரனேட்டுக்கள் என்பவற்றையும் படையினர் கைப்பற்றியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-21)

## பொருள் விலை....

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டது.

இதன்படி வர்த்தகர்கள் தமது பொருள்களுக்குக் காப்புறுதி செய்யும் பட்சத்தில் இங்கு வந்து சேரும் பொருள்களின் விலைகளில் சிறிய அதிகரிப்பு ஏற்படலாம் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மாற்றுத்...

(முதலாம் பக்கத் தொடர்)

அரசு உதாசீனம் செய்தால்— அல்லது ஏற்காது கைவிட்டால் — தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்றுத் தீர்வுத் திட்ட யோசனைகள் அடங்கிய பிரேரணை ஒன்றை எமது கட்சி எம்.பிக்கள் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பர்.

''வடக்கும்—கிழக்கும் தமிழரின் தாயகம். இலங்கை பிரிக்கப்படமுடியாதது என்று அரசுத் தரப்புக் கூறுவது போலவே, தமிழர் தாயகமும் பிரிக்கப்பட முடியாதது. அதற்கு மாறாக இணைப்பு, அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு, முஸ்லிம் அலகு என்றெல்லாம் கூறுவதை ஒரு போதும் ஏற்கமுடியாது.

''வடக்கும் — கிழக்கும் ஒன்றுபட்டதான — தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய — ஒரு சமஷ்டி முறையிலான அல்லது கூட்டாட்சி முறையிலான — தீர்வுத் திட்டம் ஒன்றே தமிழர் வேண்டுவது. அதற்காகவே நாம் போராடுகின்றோம்; அதனையே வலியுறுத்துகின்றோம்.'' — இவ்வாறு ஈ. பி. டி. பி. கட்சியின் தலைமைப்பீட வட்டாரங்கள் தெரிவித்தன.

தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு ஈ. பி. டி. பி. சமர்ப்பித்துள்ள திருத்தங்களை அரசு ஏற்காது விட்டால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய மாற்றுத் தீர்வுத் திட்டம் குறித்து அந்தக் கட்சி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரியவந்தது. (உ)


**BITSMANS**
**கல்வி நிறுவனம்**
மானிப்பாய்
**AL 97, 98**
**இரசாயனவியல்**
**Paper Class**
ஆசிரியர்:
**திரு சிவத்திரன்**
B. Sc. (Hons)
ஆரம்பம்: 15 - 10 - 97
புதன் 3-00 p.m.
(49815)


## கண்கள் கட்டப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

கிணற்றடியில் தண்ணீர் எடுக்கக் குனிந்த போது யாரோ தன்னைப் பிடித்துக் கண்ணையும், வாயையும் துணியால் கட்டியதாகவும்—

இதனால் பீதியடைந்த தான் மயங்கி விட்டதாகவும் —

அதன்பின் தனக்கு என்ன நடந்தது என தெரியவில்லை எனவும் — கூறினார்.

பரிசோதனைக்காக இவர் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இப் பெண்ணை பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி, உடல் நிலையில் எந்த வித்தியாசமும் இல்லை எனவும் —

பாலுறவு மேற்கொள்ளப் பட்டதற்கான அடையாளங்களில்லை எனவும் — தெரிவித்தார். (உ-15)

## ஜெய சிகுறு...

(முதலாம்பக்கத் தொடர்)

வடிக்கை ஸ்ரீ லங்கா படையினர் இதுவரை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளிலே மிக நீண்டது ஆகும். (ஐ-21)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை வியாகம்மா

காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த பொன்னுத்துரை வியாகம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பதுளை வர்த்தகர் பொன்னுத்துரையின் அருமை மனைவியும், சிவஞானம் (பதுளை), காலஞ்சென்ற சரஸ்வதிதேவி மற்றும் சிவபுண்ணியம் (வவுனியா), சறோஜினிதேவி (மல்லாவி), சிவபாதம் (இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை), சிவசுப்பிரமணியம் (வவுனியா), சத்தியதேவி, சகுந்தலாதேவி, சாரதாதேவி, சாவித்திரிதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியதேவி, திருச்சிற்றம்பலம், றஞ்சிதமலர், குமாரசாமி (ரவிந்தா ஜுவலர்ஸ்,கிளிநொச்சி), சாந்தகுமாரி(சட்டத்தரணி) தவமலர், சிவராசா (புதிய திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), நித்தியானந்தன் (மல்லாவி) யோகலிங்கம் (யாழ்ப்பாணம்), சிவபாதசுந்தரம் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14-10-97) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சிவபாதம்
(மகன்)

500, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(50519)

## P. K. பாலசிங்கம்

(படியாதவன்) சிவலிங்கப்புளியடி

வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியைப் பூர்விகமாகவும், பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவரான பெரியதம்பி கந்தையா பாலசிங்கம் (இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு, கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர், உரும்பிராய் இந்துக் கல்லூரி, வெலிகம அரபா ம. ம. வி. ,யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர்) 12-10-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கந்தையா-செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சிவபதிமலரின் அன்புக் கணவரும், பாலஸங்கர் (ஆள்பதிவுத்திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), பாலமயூரகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரபாளினியின் பாசமிகு மாமனாரும், குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர், நீர்ப்பாசனத்திணைக்களம், முருங்கன்), செல்வி யோகேஸ்வரி கந்தையா (பிரதி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி, விரிவுரையாளர், மகரகம தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி) திருமதி இராஜேஸ்வரி சுந்தரநடராஜன் (முன்னாள் பிரதி அதிபர், பரந்தன் ம. ம. வி., முஸ்லிம் ம. வி., வவுனியா), திருமதி இரத்தினேஸ்வரி ஜெயபாலன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி தவமணிகுமாரகுலசிங்கம், N. சுந்தரநடராஜன் (அதிபர், கணேசபுரம் விநாயக வித்தியாலயம், வவுனியா) காலஞ்சென்ற R. ஜெயபாலன் (நிர்வாக உத்தியோகத்தர், நெற்சந்தைப்படுத்தும் சபை, கிளிநொச்சி-யாழ்ப்பாண மாவட்டம்)சிவஞானகுரு சிவலிங்கம், சிவபாலன் (பிரதம சிறாப்பர், யாழ். மாநகர சபை) ஆகியோரின் மைத்துனரும், ஜே சாந்திபூசன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு) மேனகா சாந்தி ஜெயபாலன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யனித்தாசாந்தி ஜெயபாலன் (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு). துதிப்பிரியா சுந்தரநடராஜன் (கன்னியர்மடம் பாடசாலை, வவுனியா), பிரியலக்ஷனா சுந்தரநடராஜன் (கன்னியர் மடம் பாடசாலை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 15-10-97 புதன் கிழமை காலை 10-00 மணிக்கு (பழைய நேரம்) இலக்கம் 718, ''விதானை சங்கரியாவளவு'' காங்கேசன்துறை வீதி, இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
P. K. B. பாலஸங்கர்
(மகன்)

விதானை சங்கரியா வளவு,
718, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். (C/1770)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சு மனையில் 14 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org